**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>**

அ.வ.எண். 69/2020

பெயர் – (PW1) சரவணன்

நாள் – 29.07.2025

**<u>14 முதல் 17 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1) இந்த வழக்கில் நான் 1ம் வாதி என்றால் சரிதான். 2ம் வாதியான சுப்புலட்சுமி எனது சகோதரி என்றால் சரிதான். வழக்கின் 12ம் பிரதிவாதி பழனிக்குமார் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது உடன் பிறந்த தம்பி ஆவார். வழக்கின் 13ம் பிரதிவாதி மாடத்தி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அம்மா ஆவார். 12 மற்றும் 13 பிரதிவாதிகளுடன் எனக்கு பேச்சுவார்த்தை உண்டு என்றால் சரிதான். இவ்வழக்கில் 12 மற்றும் 13 பிரதிவாதிகளை வாதிகளாக நான் ஏன் சேர்க்கவில்லை என்றால் என் தரப்பில் இந்த வழக்கினை நான் தொடுத்தேன்.

2) வழக்கிற்கான விவரங்களை வழக்கறிஞரிடம் யார் சொன்னார்கள் என்றால் நான் தான் சொன்னேன். இவ்வழக்கில் எத்தனை சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளதென்றால் மொத்தம் 8 சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது. அதில் எத்தனை வீடுகள், காலி இடம் மற்றும் விவசாய நிலங்கள் என்றால் 6 விவசாய நிலங்கள் மற்றும் 2 வீடுகள் உள்ளது. வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள 8 சொத்துக்களுக்கும் நான்குமால்கள் பிராதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

3) நான் எங்கு குடியிருந்துவருகிறேன் என்றால் சாத்தூர் சத்திரப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 25 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். எனக்கு எந்த வருடம் திருமணம் நடைபெற்றதென்றால் 2000 ம் வருடத்தில் நடைபெற்றது. திருமணம் முடிந்த சமயத்தில் எனது பெற்றோரோடு இருந்தேனா என்றால் திருமணத்திற்கு முன்பாக பெற்றோரோடு இருந்தேன் அதன் பின்னர் தனிக்குடித்தனம் சென்றேன்.

4) வழக்கின் 2ம் வாதியான சுப்புலட்சுமி எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் நத்தத்துபட்டியில் குடியிருந்து வருகிறார். 2ம் வாதிக்கு திருமணம் முடிந்து எத்தனை வருடம் இருக்கும் என்றால் சுமார் 20 வருடங்கள் இருக்கும். 2ம் வாதி திருமணம் முடிந்ததில் இருந்து நத்தத்துப்பட்டியில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது சகோதரர் பழனிக்குமார் எங்கு வசித்து வருகிறார் என்றால் நத்தத்துப்பட்டியில்

தான் குடியிருந்து வருகிறார். பழனிக்குமார் திருமணமாகி சுமார் 13 வருடங்களாக நத்தத்துப்பட்டியில் குடியிருந்து வருகிறார்.

5) எனது தாயார் மாடத்தி எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் கே. மேட்டுப்பட்டியில் குடியிருந்து வருகிறார். அவர் எந்த வீட்டு எண்கொண்ட வீட்டில் வசித்து வருகிறார் என்றால் வீட்டு எண். 01/25ல் வசித்து வருகிறார். எத்தனை வருடமாக அங்கு வசித்து வருகிறார் என்றால் அவருக்கு திருமணம் முடிந்த காலத்தில் இருந்து அவர் அங்கு தான் வசித்து வருகிறார். மேற்படி கூறப்பட்ட வீடானது சொந்த வீடா, பூர்வீக வீடா என்றால் பூர்வீக வீடாகும்.

6) மேற்படி கூறப்பட்ட வீட்டின் பட்டாவானது யார் பெயரில் உள்ளதென்றால் எனது அப்பா தர்மலிங்கத்தின் பெயரில் உள்ளது. மேற்படி வீட்டின் பட்டா எண்.188 என்றால் எனக்கு நினைவில்லை. எனது தகப்பனார் பெயர் தர்மலிங்கம், அவர் உடன் பிறந்தவர்கள் யார்யார் என்றால் தனுஷ்கோடி ராமசாமி, கணபதி, தர்மலிங்கம், லோகமுத்து கிருஷ்ணன், மரகதம், தனலட்சுமி ஆகியோர்கள். மேற்படி கூறப்பட்ட 6 நபர்களின் தகப்பனார் பெயர் என்னவென்றால் சக்கணத்தேவர் ஆகும்.

7) சக்கணத்தேவருக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி பெயர் மாயக்காள், இரண்டாம் மனைவியின் பெயர் மீனம்மாள் என்றால் சரிதான். மீனம்மாள் குடியிருந்த வீட்டின் வீட்டு எண் மற்றும் எந்த தெருவில் உள்ளதென்றால் வீட்டு எண் நினைவில்லை, வீடானது மேலத்தெருவில் உள்ளது. மீனம்மாள் எத்தனை வருடமாக அந்த வீட்டில் குடியிருந்து வந்தார் என்றால் சுமார் 50 வருடத்திற்கு மேலாக குடியிருந்து வந்தார். அவர் எப்போது இறந்தார் என்று எனக்கு நினைவில்லை.

8) பிராதில் இரண்டு வீடுகள் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் ஒரு வீட்டில் எனது அம்மா இருக்கிறார் என்றும் மற்றொரு வீட்டில் தற்போது யார் வசித்து வருகிறார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் எத்தனை வருடமாக ஊருக்கு செல்லவில்லை என்றால் சுமார் 18 வருடங்களாக ஊருக்கு செல்லவில்லை. பிராதுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்து பார்த்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

9) வ.சா.ஆ. 1 ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது சர்வே எண்.588/1, 588/2, 588/3 கொண்ட கூட்டுப்பட்டா என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் சர்வே எண்.589/5 பட்டா 993ன் படி நவநீதன், மாயக்காள் பெயரில் பதிவாகியுள்ளதென்றால்

சரிதான். வா.சா.ஆ.4 ன்படி சர்வே எண்.593/2A1A பட்டா எண்.1664 பெரியபெருமாள் மனைவி தனலட்சுமி என்பவரின் பெயரில் உள்ளதென்றால் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் சரியல்ல. மேற்படி கூறப்பட்ட பட்டா எண்.1664 தவறு என எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை.

10) வா.சா.ஆ. 4 ம் ஆவணம் ஆனது தவறு என்று எனக்கு எப்போது தெரியும் என்றால் வழக்கு போடுகின்றபோது தான் தெரியும். வா.சா.ஆ.4 ஆவணம் தவறு என்று தெரிந்ததும் மேல் முறையீடு சென்றேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 சரியான நபர்களுக்கு தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிந்துள்ளதால் தான் மேல் முறையீடு எதற்கும் செல்லவில்லை என்றால் சரியல்ல.

11) வா.சா.ஆ.5 ன் படி சர்வே எண்.585/1 சக்கணத்தேவர் மனைவி மாயக்காள் பெயரில் பட்டா உள்ளதென்றால் சரிதான். மேற்படி கூறப்பட்ட வா.சா.ஆ. 5ம் பூர்வீக சொத்து என்றால் சரிதான். மேற்படி கூறப்பட்ட வா.சா.ஆ. 5 சர்வே எண்.585/1 சக்கணத்தேவர் மனைவி மாயக்காள் பெயரில் உள்ளதென்றால் சரிதான். வா.சா.ஆ. 5 பூர்வீக சொத்து என்பதால் மாயக்காளின் பெயரில் பட்டா ஏற்பட்டிருக்க கூடாதென்றால் சரிதான். வழக்கில் கூறப்பட்டுள்ள பூர்வீக சொத்துக்கள் குறித்து முந்தைய ஆவணங்கள் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

**(14 முதல் 17 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**